NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p5
**Date:** 10 July 2015

# மின்சக்தி சேமிப்பு ஆய்வுகளுக்கு $6மி.

கட்டடங்களில் மின்சக்தியை சேமிக்கும் நான்கு ஆய்வுத் திட்டங்களுக்கு கட்டட, கட்டுமான ஆணையம் ஆறு மில்லியன் வெள்ளி நிதி வழங்க முன் வந்துள்ளது.

நகரத்தைப் பேணி காக்கும் ஆய்வு, மேம்பாட்டு மாநாட்டில் நேற்று பேசிய தேசிய வளர்ச்சி துணை அமைச்சர் டெஸ்மண்ட் லீ இதனைத் தெரிவித்தார்.

அந்த நான்கு திட்டங்களும் கட்டடத்தில் இடம்பெறும் குளிர் சாதன வசதி, காற்றோட்டம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

கட்டட எரிசக்தி சேமிப்புக்காக எரிசக்தி புத்தாக்க ஆய்வுத் திட்டத்தின் கீழ் ஆணையம் விடுத்த இரண்டாவது அழைப்பின் பேரில் இந்த நிதி வழங்கப்படுகிறது.

இதுதவிர விவேகமான கட்டட தொழில்நுட்ப ஆய்வு, மேம்பாட்டு திட்டத்தைத் தொடங்கவும் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

விவேகமான, பசுமையான, சிறந்தக் கட்டடங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

பல்கலைக்கழக ஆய்வாளர்களும் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட நிறுவனங்களின் ஆய்வு சமூகத்தினரும் இதில் பங்கேற்கலாம் என்று ஆணையம் அழைப்பு விடுத்து உள்ளது.

இந்த ஆய்வுத் திட்டம், கடந்த 2014ஆம்ஆண்டு செப்டம்பரில் ஆணையம் தொடங்கிய பசுமை கட்டடங்கள் புத்தாக்கத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் இடம்பெறுகிறது. அப்போது அந்த ஆய்வு, மேம்பாட்டுக்கு $18 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது.



‘நிக்கோ’ என்ற இயந்திர மனிதன் பாடி, ஆடுமாம். என்டியு மாணவர்களும் ஜேடிசி ஆய்வாளர்களும் இணைந்து இதனை உருவாக்கியிருக்கின்றனர். இதனை சுகாதாரப் பராமரிப்புத் துறைகளில் பயன்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**படம்: டெஸ்மண்ட் லீ ஃபேஸ்புக்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.